செ.வெ.எண் : 361

நாள் : 17.06.11

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தேர்தல் அறிக்கையில் அறிவித்திருந்தபடி சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறையின் மூலம் செயல்படுத்தப்படும், ஐந்து திருமணத் திட்டங்களின் கீழ் பெண்களுக்கு வழங்கப்படும் 25,000 ரூபாய் திருமண நிதி உதவியோடு, மணப் பெண்ணின் திருமாங்கல்யம் செய்ய 4 கிராம் (22 கேரட்) தங்கம் இலவசமாக வழங்கவும், இளம் பெண்கள் கல்வி கற்பதை ஊக்குவிப்பதற்காக, இளநிலைப் பட்டம் அல்லது டிப்ளோமா பட்டயம் பெற்ற பெண்களுக்கு திருமண உதவித் தொகையை 25,000 ரூபாயிலிருந்து 50,000 ரூபாயாக உயர்த்தியும் மணப் பெண்ணின் திருமாங்கல்யம் செய்ய 4 கிராம் (22 கேரட்) தங்கம் இலவசமாக வழங்கவும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 16.5.2011 அன்று ஆணையிட்டு 6.6.2011 அன்று இத்திட்டத்தை தொடங்கி வைத்தார்கள்.

மாற்றுத் திறனாளிகள் நலத்துறையின் கீழ், பார்வையற்றோரை நல்ல நிலையில் உள்ள நபர் திருமணம் செய்து கொள்வது, காதுகேளாதோர் மற்றும் வாய்பேசாதோரை நல்ல நிலையில் உள்ள நபர் திருமணம் செய்து கொள்வது, கை அல்லது கால் இழந்தோரை நல்ல நிலையில் உள்ள நபர் திருமணம் செய்து கொள்வது மற்றும் மாற்றுத் திறனாளிகளை மாற்றுத் திறனாளிகள் திருமணம் செய்து கொள்வது என நான்கு வகை திட்டங்களின் கீழ் திருமண நிதி உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. மேற்கண்ட திட்டங்களின் கீழ் பயன்பெறும் மாற்றுத்திறன் படைத்த பயனாளிகளும் சமூகநலத் துறையின் கீழ் செயல்படுத்தப்படும் திருமண நிதி உதவி திட்டங்களால் பயனடைவது போன்றே பயன்பெற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 25,000 ரூபாய் திருமண நிதி உதவியோடு, மணப் பெண்ணின் திருமாங்கல்யம் செய்ய 4 கிராம் (22 கேரட்) தங்கம் இலவசமாக வழங்கவும், இளம் பெண்கள் கல்வி கற்பதை ஊக்குவிப்பதற்காக, இளநிலைப் பட்டம் அல்லது டிப்ளோமா பட்டயம் பெற்ற பெண்களுக்கு திருமண உதவித் தொகையை 25,000 ரூபாயிலிருந்து 50,000 ரூபாயாக உயர்த்தியும் மணப்பெண்ணின் திருமாங்கல்யம் செய்ய 4 கிராம் (22 கேரட்) தங்கம் இலவசமாக வழங்கவும் 15.6.2011 அன்று ஆணையிட்டுள்ளார்கள். இத்திட்டத்தினால் அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு சுமார் 1 கோடி ரூபாய் கூடுதல் செலவினம் ஏற்படும்.

******

வெளியீடு: இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை 9

நாள்: 17.6.2011

1/1

வெளியீடு, இயக்குநர்
செய்தி, மக்கள் தொடர்புத் துறை
சென்னை -9